N. G. M. COLLEGE
POLLACHI.
11 NOV 1999
S. No:

கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் சென்னை 600 006.

ப.மு.எண்.44095/எப்1/99 நாள் :28.10.1999

பொருள் : உதவி பெறும் கல்லூரிகள் - பணிப்பளு விவரங்கள் - பொள்ளாச்சி, என்.ஜி.எம். கல்லூரி - 1999-2000 ஆம் ஆண்டிற்கானது - பரிசீலித்து - காலிப் பணியிடங்கள் நிரப்ப அனுமதி வழங்குதல்.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.637, உயர்கல்வி, நாள் :14.12.98.
2. கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் கடித எண். 5776/ஆ2/99 நாள் : 15-7-99

-:oOo:-

பார்வை 1-ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் 1999-2000 ஆம் கல்வியாண்டில் உதவி பெறும் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் 100% காலிப் பணியிடங்களை நிரப்பிக் கொள்ள அனுமதிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் கண்டுள்ள கடிதத்தில் கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், பொள்ளாச்சி, என்.ஜி.எம். கல்லூரியின் 1999-2000 ஆம் ஆண்டிற்கான பணிப்பளு விவரங்களைப் பெற்று அனுப்பி உள்ளார். இக்கல்லூரியின் பணிப்பளு விவரங்கள் பரிசீலிக்கப்பட்டன. தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) விதிகள் 1976, விதி 11(1)ல் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பணியிடங்கள் நிர்ணயம் செய்து ஆணை வழங்கலாகிறது.

தற்போது நிரப்ப அனுமதிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் உபரி ஆசிரியர் மாற்றுப் பணித்திட்டத்தின்படி விரிவுரையாளர்களை நியமிக்கும் அதிகாரம் இயக்குநருக்கு உள்ளது. எனவே உபரி ஆசிரியர் மாற்றுப் பணித் திட்டத்தில் நியமனம் செய்யப்படும் பணியிடங்களைத் தவிர எஞ்சிய பணியிடங்களை மட்டுமே கல்லூரி நிர்வாகம் நிரப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட காலிப் பணியிடங்களை 1999-2000 ஆம் ஆண்டில் 31.03.2000-க்குள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

1. கலம் எண்.4 மற்றும் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் எண்ணிக்கை தற்காலிகமானது. 1998-1999ஆம் ஆண்டு மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளில் நிரப்பிக் கொள்ளலாம் என்று ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் நிரப்பப்பட்டதாகக் கருதி கலம் 4-ல் பணிபுரியும் ஆசிரியர் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. எனவே நிரப்பிக் கொள்ளப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை இவை கலம் 3-ல் உள்ள எண்ணிக்கைக்கு மிகையாக இருத்தல் கூடாது.

2. எந்த சூழ்நிலையிலும் கலம் 3-ல் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிட எண்ணிக்கைக்கு மிகையாக ஆசிரியர்கள் இருத்தல் கூடாது. அவ்வாறிருந்தால் கூடுதல் எண்ணிக்கைக்கு மான்யம் அளிக்கப்படமாட்டாது.

3. நியமனத்தின் போது அரசாணை எண்.111 மற்றும் 113, உயர் கல்வித் துறை, நாள் : 24.03.1999 -ல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதி மற்றும் பிற நடைமுறைகளைத் த்வறாமல் பின்பற்ற வேண்டும்.

4. சிறுபான்மை அல்லாத கல்லூரிகள் விதிமுறைகளின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர்களின் பட்டியல் பெற்று இனவாரி சுழற்சியினைப் பின்பற்றி நிரப்பிட வேண்டும்.

5. தற்போது மான்யத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கைகளைப் பாட வாரியாக தமது அலுவலக அலகுப் பதிவேட்டில் மண்டல கல்லூரிக் கல்வி இணை இ்யக்குநர் பதிவு செய்ய வேண்டும்.

6. கலம் 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள உபரி ஆசிரியர்களை மாற்றுப் பணித்திட்டத்தின் கீழ் வேறு கல்லூரிகளுக்கு இடமாற்றம் செய்து ஆணை தனியே வழங்கப்படுகிறது.

கல்லூரிக் கல்வி ஆணையர்

பெறுநர்

செயலர்,
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி-1

நகல்: கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கோவை மண்டலம், கோவை-18.

நகல்: அரசுச் செயலர், உயர்கல்வித் துறை, தலைமைச் செயலகம்
அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.
நகல்: [illegible] மேசைக்கு 14

கல்லூரியின் பெயர் : என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி

| வ. எண். | பாடப்பிரிவு | 1999-2000 ஆம் ஆண்டில் மான்யத்திற்கு நிர் ணயிக்கப்படும் பணி இடங்கள் | தற்போது பணி புரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | 1999-2000 ஆம் ஆண்டில் நிரப்பிக் கொள்ள அனுமதிக்கப்படும் காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | உபரி | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 01 | தமிழ் | 1+5=6 | 5 | 1 | | |
| 02 | ஆங்கிலம் | 1+9=10 | 9 | 1 | | ** |
| 03 | வரலாறு | 1+3=4 | 4 | இல்லை | | |
| 04 | பொருளியல் | 1+4=5 | 4 | 1 | | |
| 05 | வணிகவியல் | 2+9=11 | 11 | இல்லை | | |
| 06 | கணிதம் | (Prl.)1+1+9=11 | 10 | 1 | | |
| 07 | இயற்பியல் | 2+6+2 வி = 10 | 8 | 2 | | |
| 08 | வேதியியல் | 1+5=6 | 5 | 1 | | |
| 09 | தாவரவியல் | 1+4=5 | 5 | இல்லை | | |
| 10 | விலங்கியல் | 1+4=5 | 5 | இல்லை | | |
| 11 | கணிப்பொறி அறிவியல் | 1+4=5 | 5 | இல்லை | | |
| 12 | நூலகர் | 1 | 1 | இல்லை | | |
| 13 | உடற்கல்வி இயக்குநர் | 1 | 1 | இல்லை | | |
| | | | | | | |
| | மொத்தம் | 80 | 73 | 7 | | |
| | | | | | | |

** இப்பணியிடம் உபரி ஆசிரியர் மாற்றுப் பணித்திட்டத்தின் கீழ் நிரப்பப்படவேண்டும்.

திருத்தமில்லை.

28/10/99

28/10/99

28.10.99
J.D.F.

28.10.99